Judicial Form No. 53
(see Rule 42)
Deposition of the Witness
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, UTHAMAPALAYAM.
CC No.308/2020 Date:09.02.2026
Deposition of witness for prosecution: PW5 ( LW3)
Defence:
Court:

| | | | |
|---|---|---|---|
| Name | திரு. நூர்முகமது | Village | சேலையூர் |
| Father/ Husband Name | அப்துல்ஹமீது | Taluk | தாம்பரம் |
| Age | 52 /2026 | Calling | சிறப்பு சார்பு ஆய்வாளர் |

Solemnly affirmed in accordance with the provision of the Oaths Act 1969 (central Act 44 of 1969) on 09.02.2026 TIME 04.20 **PM**

எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை :-**

நான் தற்போது சேலையூரில் காவல்நிலையத்தில் சிறப்பு சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 27.03.2019 ம தேதி இரவு 00.30 மணிக்கு நான் என்னுடன் த.கா. பழனிச்சாமி 2919, மற்றும் சிறப்பு சார்பு ஆய்வாளர் முனியாண்டி ஆகியோருடன் கூடலூர் - குமுளி மெயின்ரோட்டில் மந்த வாய்க்கால் அருகே குடிமைப்பொருள்கள் கடத்தல் மற்றும் தடுப்பு சம்பந்தமாக வாகன தணிக்கை செய்து கொண்டிருந்த போது, இரட்டை மாட்டு வண்டி கூடலூர்- குமுளி நோக்க சென்றதில் இரண்டு வண்டிகை நிறத்தி முதலாவது வண்டியை சோதனை செய்த போது, அதன் ஓட்டுநர் பின்னால் பெயர், விலாசம் கேட்டு தெரிந்த ராஜாங்கம் மேலும் மாட்டு வண்டியை சோதனை செய்ததில் பலசரக்கு சாமான்களுக்கு நடுவே சுமார் 50 கிலோ பிடிக்கக்கூடிய 12 பிளாஸ்டிக் சிப்பங்களில் 600 கிலோ ரேசன் பச்சரிசி இருந்தது. 2-வது வண்டியில் சோதனை செய்த போது அதன் ஒட்டுநர் அஜித்குமார என்பவர் ஓட்டி வந்ததை நிறுத்தி சோதனை செய்து பார்த்த போது, மாட்டு வண்டியின் முன் பக்கமும், பின் பக்கமும் பலசரக்கு ஜாமான்களை வைத்திருந்தனர். அதன்கிடையே சுமார் 50 கிலோ பிடிக்கக்கூடிய 9 பிளாஸ்டிக் சிப்பங்களில் 438 கிலோ ரேசன் புழுங்கல் அரிசி இருந்தது. மேற்படி வண்டிகளையும், அரிசியையும் காவல் ஆய்வாளர் எங்கள் முன்னிலையில் அத்தாட்சியில் கைப்பற்றினார் அதில் நானும், பழனிச்சாமியும் சாட்சியாக கையொப்பம் செய்தோம். பின்னர் கைப்பற்றப்பட்ட பொருட்களை அலகிற்கு கொண்டு வந்து, சிறப்பு சார்பு ஆய்வாளர் முனியாண்டி தனியறிக்கை புகார் கொடுத்து சிறப்பு சார்பு ஆய்வாளர் தர்மர் அவர்கள் நிலைய குற்ற எண்.45/2019 ன் படி வழக்கு பதிவு செய்தார். மேற்படி எதிரிகள் தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை காவல்ஆய்வாளர் அவர்கள் எங்கள் முன்னிலையில் பதிவு செய்தார், அதில் நானும், பழனிச்சாமியும் சாட்சியாக கையொப்பம் செய்துள்ளோம். என்னிடம் காட்டப்படும் எதிரி ராஜாங்கம், எதிரி அஜித்குமார் அளித்த ஒப்புதல் வாக்குமூலங்களில் உள்ள 1-வது சாட்சி கையொப்பங்கள் என்னுடையது தான் அது முறையே **அ.சா.ஆ.7,8** ஆகும். என்னிடம் காட்டப்படும் அத்தாட்சியில் உள்ள 1-வது சாட்சி கையொப்பம்

என்னுடையது தான் அது **அ.சா.ஆ.9** ஆகும். ஆய்வாளர் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :–**

3) சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் மெயின்ரோடு வெளிச்சம் இல்லாத பகுதி என்றால் சரியல்ல. சாலையின் இருபுறங்களிலும் தெருவிளக்கு சம்பவ சமயத்தில் இல்லை என்றால் சரியல்ல. சம்பவ இடத்தில் சம்பவ சமயத்தில் நானும், தலைமை காவலர் பழனிச்சாமி மற்றும் சிறப்பு சார்பு ஆய்வாளர் முனியாண்டி ஆகியோர் தணிக்கையில் இருந்தோம். 1–வது எதிரி ஓட்டி வந்த வண்டி யார் சோதனை செய்தார் என்றால் 1–வது எதிரி ஓட்டி வந்த வண்டி முதலாவதாக வந்ததால் 3 பேரும் மறித்து சோதனை செய்தோம், பின்னர் 2–வது தாக வந்த வாகனத்தையும் 3 பேரும் மறித்து சோதனை செய்தோம். சம்பவ இடத்தின் அருகே சம்பவ சமயத்தில் ஆட்கள் நடமாட்டம் இல்லை என்றாலும் கடைகள் இல்லை என்றாலும் சரியல்ல, ஒரு பழக்கடை பூட்டியிருந்தது அதில் ஒருவர் படுத்துயிருந்தார். சம்பவ இடத்திற்கு இரவு 12.00 மணிக்கு சென்றோம் பின்னர் வழக்கில் சம்மந்தப்பட்ட வாகனங்களை பிடித்துவிட்டு அங்குயிருந்து கிளம்பினோம். இவ்வழக்கில் சம்மந்தப்பட்ட மாட்டு வண்டிகளை எங்கள் அலகிற்கு எத்தனை மணிக்கு வந்தோம் என்றால் 12.30 மணிக்கு கிளம்பி காலை 07.00 மணிக்கு வந்தோம். சம்பவ இடத்திற்கும், எங்கள் அலகிற்கும் எத்தனை கி.மீ என்றால் 17–18 கி.மீ இருக்கும். சம்பவ இடத்தில் இருந்து மாட்டு வண்டியை ஓட்டி வந்தால் அலகிற்கு 2–2.30 மணிநேரத்தில் வந்துவிடலாம் என்றால் நாங்கள் 07.00 மணிக்கு வந்து சேர்ந்தோம். சம்பவ இடத்தில் நான் அத்தாட்சி தயார் செய்யவில்லை என்றால் சரிதான். நாங்கள் அலகிற்கு வந்த பிறகு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டு காவல் ஆய்வாளர் விசாரணை செய்தார் என்றால் சரிதான். இவ்வழக்கில் கைப்பற்றப்பட்ட புழுங்கல் அரிசி மற்றும் பச்சரிசி எங்கு வைத்து எடை போடப்பட்டது என்றால் சிப்பம் 50 கிலோ என்பதால் சுமார் 438 கிலோ புழுங்கல் இருக்கும், 600 கிலோ பச்சரிசி இருக்கும் என குறிப்பிட்டோம். சாக்குமூட்டைகளில் உள்ள அரிசியை தூக்கி பார்த்து அதன் எடையை சொல்லமுடியுமா என்றால் அனுபவம் இருப்பதால் சொல்லமுடியும். எதிரிகள் ஒப்புதல் வாக்கமூலம் கொடுக்கவில்லை என்றாலும் ஆய்வாளருக்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. இந்த வழக்கு சம்மந்தமாக ஆய்வாளர் 23.07.2019–ம் தேதி காலை 07.00 மணியளவில் அலகில் வைத்து ஆய்வாளர் என்னை விசாரித்தார். நான் சொல்வது போல் சொன்ன இடத்தில் சொன்ன நேரத்தில் எதிரிகளையோ, வண்டிகளையோ பிடிக்கவில்லை என்றால் சரியல்ல. சம்பவ இடத்தில் இருந்த அலகிற்கு நடந்து வந்தால் 3 மணிநேரத்தில் வந்துவிடலாம் என்றாலும் வண்டி மூலம் 7 மணிநேரம் நாங்கள் வந்துயிருக்கிறோம் என்பது வழக்கிற்காக சொல்லப்படும் பொய் என்றால் சரியல்ல. நான் சொல்வது போல் சம்பவ இடத்தில் பொருட்கள் கைப்பற்றப்படவில்லை என்றாலும், புள்ளி விவர கணக்கிற்காக ஆய்வாளர் பதிவு செய்த வழக்கிற்கு பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. எதிரிகளுக்கும், வழக்கிற்கும் சம்பந்தம் இலலை என்றால் சரியல்ல.

சாட்சி இன்று இந்நீதிமன்றத்தில் ஆஜராகி என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் வாய்மொழியாக சாட்சியம் அளித்ததை இந்நீதிமன்றம் தட்டச்சர் மூலமாக பதிவு செய்து சாட்சி படித்து பார்த்து/விளக்கி கூறி சரியென ஒப்புக்கொண்டுகையொப்பம் செய்துள்ளார்.

Sd/P. Kamarasu
நீதித்துறை நடுவர்,
உத்தமபாளையம்.